## இளங்கோய்க்குடி

1200 வருடங்களுக்கு முன்பு பாண்டி நாட்டை வரகுண மஹாராஜா என்ற பாண்டி மன்னன் ஆண்டான். அக்காலத்தில் அவன் பேரரசனாக விளங்கினான். அவன் காலத்தில் இவ்வூர் [அம்பாசமுத்திரம்] இளங்கோய்க்குடி என்று அழைக்கப்பட்டது. வரகுண மஹாராஜாவின் மகன் சடையமாறன் காலத்திலும் இவ்வூர் அவ்வாறே அழைக்கப்பட்டது.

கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மாபெரும் வீரனாகிய சோழன் தலை கொண்ட வீரபாண்டியன் என்ற மன்னன் காலத்திலும் அம்பாசமுத்திரம் இளங்கோய்க்குடி என்றே அழைக்கப்பட்டது. அதாவது கி.பி. எட்டாம் நூற்றாண்டில் அல்லது அதற்கும் முன்பிருந்து கி.பி. பத்தாம் நூற்றாண்டின் இறுதிவரை இளங்கோய்க்குடி என்று அழைக்கப் பட்டு வந்தது.

## இராஜராஜ சதுர்வேதிமங்கலம்

கி.பி. 1000-ல் சோழ நாட்டை முதலாம் இராஜராஜ சோழன் என்ற மாபெரும் மன்னன் ஆட்சி புரிந்தான். அவன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து ஜெயித்தான். அதன் பின் பாண்டிய நாட்டிற்கு எனவே இவ்வூர் ராஜராஜ சோழன் காலத்தில் ஒரு சிறந்த படைத்தளமாகவும் இருந்தது.

இவ்வாறாக ராஜராஜ சோழன் காலத்தில் ராஜராஜ சதுர்வேதி மங்கலமான அம்பா சமுத்திரம் சிறந்த கல்வித்தலமாகவும், வியாபாரத்தலமாகவும், விவசாயத் தலமாகவும், இராணுவத் தளமாகவும் அமைந்து சிறந்து விளங்கியது. அதனால் தான் நெல்லை மாவட்டத்திலேயே ஒரு சிறந்த பகுதியாக பயிர்வளம் குன்றாத பகுதியாக அம்பாசமுத்திரம் சிறந்து விளங்குகின்றது.

## நூற்றாண்டுகளில் அம்பா சமுத்திரம்

**கி.பி.8-ஆம் நூற்றாண்டில்** வரகுணமஹாராஜா தொண்டைமண்டல பெண்ணையாற்றங்கரையிலுள்ள அரசூர் வீற்றிருந்து எரிச்சாவுடையார் கோயிலுக்கு 290 காசுகள் கொடையளித்த சிறப்பு செய்தி காணப்படுகிறது.

**கி.பி. 10-ஆம் நூற்றாண்டில்** முதலாம் ராஜராஜன் பாண்டி நாட்டை பிடித்த பின் இவ்வூரில் [திருவாலீஸ்வரம்] ஒரு இணையிலா கலைக்கோயிலைக் கட்டினான். இக்கோயில் தஞ்சைப் பெருவுடையார் கோயிலை எடுக்கு முன்பு முன்மாதிரியாக

செய்தது போல் உள்ளது. அதுமட்டுமல்ல அக்கோயிலை ஒரு சிறந்த பொருளாதார பொக்கிஷமாக்கி அங்கு நிலையாக ஒரு படையையும் நிறுவிய செய்தி உள்ளது.

கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் முதலாம் இராஜேந்திர சோழன் வரலாற்றில் ஒரு புதிய முறையைக் கையாண்டான். தன் மகனுக்கு சோழ பாண்டியன் எனப் பட்டம் சூட்டிப் பாண்டிய நாட்டை ஆளச் செய்தான். அச் சோழபாண்டியன் தன் கவனத்தை இவ்வூரில் செலுத்தினான். அதனால்தான் அவன் வரலாற்றினை அறிய வேண்டுமானால் இவ்வூருக்குத்தான் [மன்னார் கோயில்] வரவேண்டும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

கி.பி. 12,13-ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த பாண்டி மன்னர்கள் இவ்வூருக்கு மேலும் பல சிறப்பினைச் செய்தனர். பிரமதேசத்திலுள்ள பிக்ஷாடனர், ரிஷிபத்தினியர், உருவங்கள் இவர்கள் காலத்தவை. குடைவரைக்கோயில் போன்று எடுக்கப்பட்ட இந்த பிக்ஷாடனர் சந்நிதி வேறெங்கும் காணக்கிடைக்காத அரிய கலைச் செல்வமாகும். அசப்பில் தாராசுரம் பிக்ஷாடனர், ரிஷிபத்தினியரை நம் நினைவிற்குக் கொண்டு வருகின்றனர்.

# அம்பாசமுத்திரம்

நெல்லை மாவட்டத்தின் தென்மேற்கே அமைந்தது இவ்வூர். நெல்லை பேருந்து நிலையத்திலிருந்து பாபநாசம்-செங்கோட்டை செல்லும் [கல்லூர்-பத்தமடை வழி] பேருந்துகளில் சென்றால் சுமார் 30 கல் தூரத்தில் இவ்வூரை வந்தடையலாம்.

மேற்கே மேற்குத்தொடர்ச்சி மலையையும், தெற்கே அகத்தியர் வாழ்ந்த பொதிகை மலையையும், அடர்த்தியான காடுகளையும், அழகு சொட்டும் அருவிகளையும் தன்னருகே கொண்டது அம்பாசமுத்திரம். இது ஒரு பழமையான ஊர். அழகெனச் செல்லும் தண்பொருநை ஆறு [தாமிரபரணி] இவ்வூருக்கு எழிலையும் வயல் வெளிகளுக்குப் பசுமைச் செல்வமாம் வளமையையும் வாரி வழங்குகின்றது. இவ்வாற்றின் வடபுறத்தே அமைந்ததுதான் அம்பாசமுத்திரம். இவ்வாற்றங்கரையில் தான் இவ்வூரின் பழமை மிக்க இரு சிவன் கோயில்கள் அமைந்துள்ளன. ஒன்று எரிச்சாவுடையார் கோயில்; மற்றொன்று, திருமூலநாதர் கோயில்.

ஆகியோர் காலத்திய கல்வெட்டுக்கள் உள்ளன.

### சிவனும் பெருமாளும்

திருமூலநாதர் கோயிலிலும் எரிச்சாவுடையார் கோயிலைப் போலவே விஷ்ணுவுக்கென தனி சந்நிதி உள்ளது. வரகுண மஹாராஜா, சடைய மாறன், சோழன் தலைகொண்ட வீரபாண்டியன் ஆகியோர் காலத்தில் இக்கோயில் சிவபெருமான்

திருச்சாலைத்துறைத் திருமூலத்தானத்
துப் படாரர்

என்றும்,

விஷ்ணு

திருச்சாலைத்துறை நின்றருளின பெருமானடிகள்

என்றும் அழைக்கப்பட்டனர்.

இக்கோயில் விஷ்ணு ஆலயத்தில் நின்ற நிலையில் காணப்படுகின்றார். எனவே இவரைப் பற்றி குறிப்பிடும்போது,

நின்றருளின பெருமானடிகள்

என்று குறிப்பிட்டனர்.

வரகுண மஹாராஜா காலத்தில் இக்கோயில் சிவனுக்கும் பெருமாளுக்கும் நொந்தாவிளக்கு எரிக்க முறையே பதினைந்து காசுகள் கொடுக்கப்பட்டன.

சுந்தர சோழபாண்டியன் என்பவன்: இவனுடைய கல்வெட்டும் எரிச்சாவுடையார் கோயிலில் உள்ளது. இவன் காலத்தில் இக்கோயிலுக்கு விளக்கெரிக்க 10 காசுகள் கொடுக்கப்பட்டன. இவன் பெயரில் சோழ பாண்டியன் மடம் என்றவொரு மடம் இருந்தது.

### ஜடாவர்மன் ஸ்ரீவல்லப பாண்டியன்

இந்த மன்னனுடைய கல்வெட்டும் எரிச்சாவுடையார் கோயிலில் காணப்படுகிறது. இக்கோயிலுக்கு ஜடாவர்மன் ஸ்ரீவல்லபன் காலத்தில் இரண்டு மா நிலம் தானமாக கொடுக்கப்பட்டது. இக்கல்வெட்டில் இம்மன்னனது அதிகாரிகள் பலர் கையெழுத்திட்டிருக்கிறார்கள். அதில் ஒருவன் பெயர் திருவொற்றியூர் தேர் பொலிய நின்றான் என்பது. திருவொற்றியூர் என்பது சென்னையை அடுத்துள்ள ஊராகும். இவ்வூரிலிருந்து சென்றவன் பாண்டி நாட்டில் அதிகாரியாக இருந்தான்.

### கல்வெட்டில் எரிச்சாவுடையார்

எரிச்சாவுடையாராகிய சிவபெருமான் கோயிலில் விஷ்ணுவுக்கும் தனி சந்நிதி உள்ளது.

வரகுணமஹாராஜா, சடையமாறன், சோழன் தலைகொண்ட வீரபாண்டியன்,

ஆகியோர் கால கல்வெட்டுக்களில் [கி.பி. 8-ஆம் நூற்றுண்டு முதல் 10-ஆம் நூற்றுண்டு வரை] இக்கோயில் சிவபெருமான்,

திருப்போத்துடையபடாரர்

என்றும்,

விஷ்ணு,

திருப்போத்துடைய ஆழ்வார்

என்றும் கூறப்பட்டார்.

சோழபாண்டியனுகிய ஜடாவர்மன் சுந்தர சோழ பாண்டியன் காலத்தில் [கி.பி. 11-ஆம் நூற்றுண்டில்] எரிச்சாவுடையாராகிய சிவபெருமான், திருப்போத்துடையார் எனக் கூறப்பட்டார்.

ஜடாவர்மன் ஸ்ரீவல்லப பாண்டியன் காலத்தில் [கி.பி. 11, 12-ஆம் நூற்றுண்டுகளில்] திருப்போத்துடைய மஹாதேவர் என்று எரிச்சாவுடையார் அழைக்கப்பட்டார்.

சேரமன்னனுகிய பூதல வீர ஸ்ரீ உதய மார்த்தாண்டேஸ்வரன் காலத்தில் [கி.பி. 16-ஆம் நூற்றுண்டில்] 'திருப்போற்றீசுரமுடைய நயினர்' என்று கூறப்படுகிருர்.

### எரிச்சாவுடையார் கோயிலில் குறிப்பிடத்தக்கவை

இக்கோயிலில் உள்ள நடராஜர், சிவகாமி சிலைகள் கற்களாகிய பெரிய சிலைகளாகும். அழகிய தோற்றங்களுடைய இச்சிலைகள் கண்டு ரசிக்கத் தக்கவை. இக்கோயில் கோபுரவாயிற் பெருங் கதவுகளிரண்டிலும் இறைவன் திருவிளையாடல்கள் பற்றிய அழகிய மரவேலைப்பாடுகள் உள்ளன.

### குறிப்பிடத்தக்க பூஜைகள்

கோயிலில் நடக்கும் பூஜைகளில் குறிப்பிடத்தக்கன 'திருவனந்தர்' 'உதயமார்த்தாண்டன்' ஆகியவையாகும் இப்பூஜைகள் கேரள மன்னன் உதயமார்த்தாண்டவர்மன் காலத்தில் ஏற்படுத்தப்பட்டவை. அப்பூஜைகள் தொடர்ந்து இன்று வரையும் நடத்தப்பட்டு வருகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

### திருமூலநாதர் கோயில்

இக்கோயில் எரிச்சாவுடையார் கோயிலுக்கு வடக்கும் அம்பாசமுத்திரத்தில் தெற்கோரத்திலும் உள்ள மேட்டுப்பாளையத் தெருவில் அமைந்துள்ளது. இக்கோயிலும் எரிச்சாவுடையார் கோயிலைப் போலவே வரலாற்றுச் சிறப்புடையது. இக்கோயிலிலும் வரகுணமஹாராஜா, சடையமாறன், சோழன் தலைகொண்ட வீரபாண்டியன் சோழபாண்டியன் ஜடாவர்மன் சுந்தரசோழ பாண்டியன்

மஹாதேவர் என்றும், பெருமாள், திருச்சாலைத்துறை கருமாணிக்கத்தேவர் என்றும் அழைக்கப்பட்டனர்.

இம்மன்னன் காலத்தில் பலரும் விளக்கெரிக்க காசுகள், ஆடுமாடுகள் ஆகியவற்றைக் கொடுத்துள்ளனர். இராயசிகாமணி என்ற ஊரிலுள்ள வெள்ளாளன் ஒருவன் இக்கோயிலுக்கு நொந்தா விளக்கொன்றை செய்து வைத்தான். அவன் செய்துவைத்த விளக்கின் நீளம் நான்கு சாண் என்றும் எடை 80 பலம் என்றும் கூறப்பட்டுள்ளது.

இக்கோயில் அருகில்தான் இராஜராஜப் பெருந்தெருவு எனக் கூறப்பட்ட வியாபாரிகள் வசிக்கும் தெரு இருந்தது. இக்கோயிலுக்கு ஆயிரத்து அஞ்ஞூற்றுவர் என்று கூறப்பட்ட வியாபாரிகளில் ஒருவன் நிலம் தானம் அளித்தான்.

### வீரமார்த்தாண்டேஸ்வரர் கோயில்

சேரமன்னன் பூதலவீர ஸ்ரீ உதையமார்த்தாண்டவர்மன் என்பவன் இராஜராஜ சதுர்வேதிமங்கலத்தின் சில பகுதிகளை வென்று ஒரு பகுதிக்கு உதயமார்த்தாண்ட சதுர்வேதிமங்கலம் என்று பெயர் வைத்தான் என்று முன்னர் கண்டோம். அப்பகுதியில் அம்மன்னனால் எடுக்கப்பட்டவுடையார் கோயிலுக்கு பல தானங்கள் செய்யப்பட்டன. இம்மன்னனின் கல்வெட்டுக்கள் ஓரிரண்டுதான் கிடைக்கின்றன. அவைகளும் சிதைந்தே உள்ளன.

### சோழன் தலைகொண்ட வீரபாண்டியன்

சோழநாட்டை ஆண்டு வந்தான் முதல் பராந்தக சோழன் என்னும் சோழமன்னன். பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுரையை இவன் ஜெயித்து தன் நாட்டோடு சேர்த்து கொண்டான். அவன் இறந்த பின் அவன் மகன் கண்டராதித்த சோழன் ஆட்சிக்கு வந்தான். இக்காலத்தில் பாண்டிய நாட்டில் வீரபாண்டியன் என்ற வீரன் ஒருவன் இருந்தான். பாண்டிய மன்னர் பரம்பரையில் பிறந்த இளவரசன். இவன் பெரிய வீரனாகையால் கண்டராதித்த சோழனிடமிருந்து மதுரையை போரிட்டு மீட்டு பாண்டி நாட்டை சுயாட்சி செய்து வந்தான். இவனுக்கு சோழன் தலைகொண்ட வீரபாண்டியன் என்ற பெயர் காணப்படுவதால் சோழமன்னனோடு போரிட்ட போது சோழ மரபில் உள்ள ஒருவனை கொன்றிருத்தல் வேண்டும். அவ்வாறு வீரபாண்டியனால் கொல்லப்பட்ட சோழ மரபினன் யார் எனத் தெரியவில்லை.

இந்த சோழன் தலைகொண்ட வீர பாண்டியன் காலத்திலும் எரிச்சாவுடையார் கோயிலுக்கு நிலம் தானமாக கொடுக்கப்பட்டது. இவ்வாறு கொடுக்கப்பட்ட நிலத்தின் அளவு பத்து வேலி. அப்பதிற்று வேலி நிலமும் எரிச்சாவுடையார் கோயிலில் உள்ள திருவேங்கடநிலை தேவர் என்ற இறைவனுக்கும் கணபதிக்கும் அமுது படைத்து வழிபாடு செய்வதற்காக கொடுக்கப்பட்டது. அந்நிலங்கள் அக் கோயிலில் தொழில் புரிந்த உவச்சர் [பறை கொட்டுபவர்] ஸ்ரீ கார்யம் ஆராய்பவர் [நிர்வாகம் செய்பவர்] விறகிடுபவர்கள். வண்ணார்கள் ஆகியோருக்கு பயிர் செய்வதற்காக பிரித்து கொடுக்கப்பட்டது.

### சோழ பாண்டியன்

சோழ நாட்டில் முதல் இராஜராஜ சோழன் மகன் முதல் இராஜேந்திர சோழன் ஆட்சிக்கு வந்தான். அவன் தன் மகன் சுந்தரசோழன் என்பவனுக்கு மதுரை அரண்மனையில் பட்டாபிஷேகம் செய்தான். அதோடு அவனுக்கு சோழ பாண்டியன் என்ற பட்டம் சூட்டி பாண்டி நாட்டை ஆண்டு வருமாறு கூறினான். இவ்வாறு பாண்டி நாட்டை ஆண்ட சோழ பாண்டியர் சிலர். அவர்களுள் முதல்வனும், முக்கியமானவனும் ஜடாவர்மன் சடையமாறன் காலத்தில் இவ்வூரின் மேற்கே கிடந்த தரிசு நிலத்தை ‘பூவன் பறையன்’ என்பவன் விலை கொடுத்து வாங்கினான். அவ்வாறு வாங்கப்பட்ட தரிசு நிலத்தை திருத்தி வயல், குளம் ஆகியவை ஏற்படுத்தினான். இந்த வயலுக்கு நீர் இறைக்க ஒரு ஆளையும் நியமித்து, வயல், குளம், ஆகியவற்றை திருமூலநாதர் கோயிலுக்கு தானமாக அளித்தான். இவ்வாறு பூவன் பறையனால் திருத்தியமைக்கப்பட்ட நிலத்திற்கு பூவன்பறையன் மசக்கல்’ என்று பெயரிடப்பட்டிருந்தது. மேலும் இப்பூவன்பறையன் என்பவன் கோயிலுக்கு விளக்கெரிக்க ஒரு பசுவும் கன்றும் கொடுத்தான்.

சோழன் தலைகொண்ட வீரபாண்டியன் காலத்தில் திருமூலநாதர் கோயிலுக்கு நிலம் தானம் செய்யப்பட்டது. இக்கோயிலில் ஸ்ரீகரண திருச்சித்திரக்கூடம் என்றவொரு இடம் இருந்தது. இவ்விடத்திலிருந்து கொண்டு திணைக்களத்தான் சாத்தன் என்பவன் கீழூர்குண்டு நிலம் என்ற ஒரு நிலத்தை கோயிலுக்கு அளித்தான்.

சோழபாண்டியன் ஜடாவர்மன் சுந்தர சோழன் காலத்தில் திருமூலநாதர் கோயில் சிவபெருமான் திருச்சாலைத்துறை உடைய

னனின் மூத்த மகன் வீரராமவர்மன் என்பவன்.

அவன் எரிச்சாவுடையார் கோயிலுக்கும் திருமூலநாதர் கோயிலுக்கும் பல தானங்கள் செய்தான்.

முதல் கல்வெட்டில் நிலமும் பூந்தோப்பும் தானமளித்த செய்தியும், இரண்டாம் கல்வெட்டில் நொந்தா விளக்குகள் மூன்றும் சந்தியா தீபம் ஒன்றும் தானமளித்த செய்தியும். மூன்றும் கல்வெட்டில் மூன்று தோப்புகளும், நான்காம் கல்வெட்டில் நிலமும் தானமளித்த செய்திகள் கூறப்பட்டுள்ளன. புருஷோத்தம பெருமாள் கோயிலுக்கு திருநெல்வேலி செண்பகராமன் என்பவன் தானமளித்துள்ளான். இவன் காருகுறிச்சி, பனகுடி, துப்பாக்குடி, அடைச்சாணி, காக்கநல்லூர், முதலிய ஊர்களில் தனக்கு சொந்தமாக உள்ள நிலத்திலிருந்து ஆண்டு ஒன்றுக்கு ஏராளமான நெல்லை விசேட தீபங்களுக்கும் நைமித்தியங்களுக்கும் தானமளித்தான்.

ராஜராஜனும் ராஜராஜ சதுர்வேதி மங்கலமும்

முதலாம் ராஜராஜ சோழன் பாண்டி நாட்டைக் கைப்பற்றியதும் இளங்கோய்க்குடி என்ற ஊரை ராஜராஜ சதுர்வேதி மங்கலம் என்று மாற்றியமைத்தான்.

கி.பி. 15, 16-ஆம் நூற்றூண்டில் வாழ்ந்த மன்னர்களால் அமைக்கப்படும் ஊர்களுக்கு சமுத்திரம் என்று பெயரிடுவது வழக்கம்.

அதுபோல அதிகாரியால் தன் தங்கைக்குக் கொடுக்கப்பட்ட இந்த ஊர் அம்பாள் சமுத்திரம் என்று வழங்கி, பின்னர் அம்பா சமுத்திரம் என்று வழங்கப்பட்டிருக்கலாம். ஆனல் இப்பெயர் கி. பி. 16-ஆம் நூற்றூண்டுக் கல்வெட்டுக்களில் காணப்படவில்லை. ஆதலால் அதற்குப் பின்னர் தான் ஏற்பட்டிருக்கவேண்டும்.

இவ்வாறுக இளங்கோய்க்குடி என்ற ஊர் நாளடைவில் பல பெயர் மாற்றங்களைப் பெற்று தற்போது அம்பாசமுத்திரம் என அழைக்கப்பட்டு வருகிறது.

சென்னை அருங்காட்சியகக் கல்வெட்டு

1200 வருடங்களுக்கு முன்பு பாண்டி நாட்டை வரகுணமஹாராஜா என்ற மன்னன் ஆண்டான் என்று பார்த்தோமல்லவா? அவனது கல்வெட்டு ஒன்று எரிச்சாவுடையார் கோயிலில் இருந்தது. அந்த கல்வெட்டு வட்டெழுத்து என்னும் எழுத்தால் எழுதப்பட்டது. அக்கல்வெட்டு சற்று பெரிதாகவே இருந்தது. அந்த கல்வெட்டு இப்போது எரிச்சாவுடையார்

கோயிலில் இல்லை. அந்த கல்வெட்டு மிகவும் வரலாற்று சிறப்புடையது என்பதால் சென்னை அருங்காட்சியகத்திற்கு கொண்டு சென்று விட்டார்கள்.

அக்கல்வெட்டிலுள்ள வரலாற்று சிறப்பு என்னவென்ருல், வரகுண மஹாராஜா பல்லவ மன்னனை வென்று தொண்டை மண்டலத்திலுள்ள பெண்ணை யாற்றங் கரையில் அரசூர் என்ற ஊரில் இருந்த போது அம்பாசமுத்திரம் எரிச்சாவுடையார் கோயிலுக்கு 290 காசுகள் அளித்தான். அக்காசுகளை தினசரி வழிபாடு நடத்துவதற்காக பயன்படுத்தவேண்டும் என்று கூறியிருந்தான்.

இதில் முக்கியமான செய்தி பல்லவ மன்னனை வென்று தொண்டை நாட்டின் ஒரு பகுதியை ஜெயித்ததுதான். இத்தகைய வரலாற்று செய்திகளைக் கூறும் கல்வெட்டுக்கள் மிகவும் சிறப்புடையதாகக் கருதப்படும். அது தவிர இன்னும் பலர் கல்வெட்டுக்களும் உள்ளன.

## சடைய மாறன்

இவன் வரகுண மஹாராஜாவின் மகன். இவன் ஆட்சிபுரிந்த காலத்திலும் எரிச்சா கோயில்தான் வீரமார்த்தாண்டேஸ்வரர் கோயிலாகும். இக்கோயிலை பட்டர்கோயில் என்று தற்போது மக்கள் அழைக்கிருர்கள். அக்கோயிலில் 10, 13–ஆம் நூற்ருண்டைச் சேர்ந்த துண்டுக் கல்வெட்டுக்கள் தரையில் ஆங்காங்கே காணப்படுகின்றன. அவை வேற்றிடங்களிலிருந்து இங்கு கொண்டு வரப்பட்டவையாகும்

## புருஷோத்தம பெருமாள் கோயில்

வைணவக் கோயில்களில் இங்கு மிகவும் குறிப்பிடத்தக்கது ஸ்ரீ புருஷோத்தம பெருமாள் கோயிலாகும். புருஷோத்தம பெருமானின் உருவம் அழகுவாய்ந்தது. அவ்வுருவமானது, அழகிய தாமரை மலரும், அதன் மேல் ஆதிசேடரும், அவருக்கு மேலே கருடாழ்வார் அமர்ந்திருக்க, கருடனின் தோள்மேல் புருஷோத்தமப் பெருமாள் அமர்ந்திருக்கிருர். அவர்மடிமேல் அழகாக லட்சுமி தேவி அமர்ந்திருக்கிருர். இந்த சிற்பம் பிற்காலத்ததுதான் என்ருலும் வேறு எங்கும் காணுதற்கரியது.

## சேரர் கால கல்வெட்டுக்கள்

அம்பாசமுத்திரம் கோயில்களில் சேர மன்னன் உதயமார்த்தாண்டவர்மனின் கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. அம்மன்

கொடுப்பது வழக்கம். ஆதலால் இவ்வூர் விவசாயத்துறையில் மிகவும் சிறந்து விளங்கியது. ராஜராஜன் காலத்தில் ஏராளமான நீர்ப்பாசன வசதிகள் செய்யப் பட்டன.

கல்வித்துறையிலும் வியாபாரத்துறை யிலும், வணிகத்துறையிலும் இவ்வூர் சிறந்து விளங்கியதால் இவ்வூரின் வரு மானம் பெருகிற்று. சோழர்கள் காலத்தில் கோயில்களில்தான் அந்தந்த ஊர்களின் வருமானத்தை சேர்த்து வைப்பது வழக் கம். அதுபோல இந்த ஊரிலுள்ள கோயில் களிலும் வருமானம் குவிந்தது. இப் போது திருவாலீஸ்வரம் எனக்கூறப்படும் ஊரும், அக்காலத்தில் இராஜராஜ சதுர் வேதி மங்கலத்தைச் சேர்ந்ததுதான். ஆகையால் திருவாலீஸ்வரம் கோயிலில் ஏராளமான பொக்கிஷம் இருந்தது. இந்த பொக்கிஷத்தைப் பாதுகாக்க படை வீரர் கள் தேவைப்பட்டனர். எனவே திரு வாலீஸ்வரம் கோயிலிலுள்ள பொக்கிஷத் தைப் பாதுகாக்க ராஜராஜன் ஒரு படையையே நியமித்தான். அப்படைக்கு மூன்று கை மகாசேனை என்பது பெயர். அப்படையினர் கோயில் பொக்கிஷத்தைப் பாதுக்காத்ததோடு போரில் கலந்து கொண்டு பலநாடுகளையும் வென்றனர்.

ராஜராஜ பாண்டி மண்டலம் என்று பெயர் சூட்டினான். நாட்டின் பெயரை மாற்றியதுபோல ஊர்களின் பெயரையும் மாற்றினான். பாண்டியர்கள் ஆண்ட காலத்தில் இளங்கோய்க்குடி என்ற வழங் கிய இந்த அம்பாசமுத்திரம் ஊரை தன் பெயரில் இராஜராஜ சதுர்வேதிமங்கலம் என்று மாற்றினான். அது முதல் இளங் கோய்க்குடி என்ற பெயர் மறைந்து ராஜ ராஜ சதுர்வேதிமங்கலம் என்று வழங்கப் பட்டது. இப்பெயர் கி.பி. 16-ஆம் நூற்றாண் டின் தொடக்க காலம் வரை நீடித்தது.

### வேளாக்குறிச்சி

கி.பி. 15, 16-ஆம் நூற்றாண்டுகளில் பாண்டி நாட்டை பாண்டிய மன்னர்கள் சிலர் ஆண்டு வந்தனர். இவர்களது பல வீனத்தை பயன்படுத்திக் கொண்டான் சேர மன்னன் ஒருவன். அவன் பெயர் பூதல வீர ஸ்ரீ உதய மார்த்தாண்டவர்மன் என்பது. இவன் கி.பி. 1517-ல் பாண்டிய நாட்டின் மீது படை எடுத்தான். அவ் வாறு படையெடுத்தபோது ராஜராஜ சதுர்வேதி மங்கலத்தில் [அம்பாசமுத்தி ரம்] சில பகுதிகளை வென்று கைப்பற்றிக் கொண்டான். அவ்வாறு அவன் கைப் பற்றிய ஊரின் ஒரு பகுதி வேளாக்குறிச்சி என்று வழங்கப்பட்டது. இந்த வேளாக்

குறிச்சி என்பது ஊரின் நடுப்பகுதிக்கு வழங்கப்பட்டது. அதாவது திருமூலநாதர் கோயிலும் எரிச்சாவுடையார் கோயிலும் இருக்கும் பகுதிக்கு அப்பெயர் வழங்கப்பட்டு வந்தது.

**உதயமார்த்தாண்ட சதுர்வேதிமங்கலம்**

பூதல வீர உதய மார்த்தாண்டவர்மன் இவ்வூரினை வென்று நடுப்பகுதிக்கு வேளாக்குறிச்சி என்று பெயர் வைத்து விட்டு கிழக்குப் பகுதிக்கு 'உதய மார்த்தாண்ட சதுர்வேதிமங்கலம்' என்று தன் பெயரை வைத்தான். இந்த உதய மார்த்தாண்ட சதுர்வேதிமங்கலத்தில்தான் வீரமார்த்தாண்டேசுரமுடைய நயினார் கோயில் இருந்தது. அதாவது இப்போது பட்டர் கோயில் என வழங்குவதுதான் வீரமார்த்தாண்டேசுரமுடைய நயினார் கோயில் என்பது. இக்கோயில் இருந்த இடம்தான் உதயமார்த்தாண்ட சதுர்வேதிமங்கலம் என்று வழங்கப்பட்டது.

அதாவது கோயிலுக்கும் அக்கோயில் இருந்த ஊர்ப் பகுதிக்கும் தன் பெயரையே வைத்து மகிழ்ந்தான் சேர மன்னன்.

**அம்பாசமுத்திரம்**

மேற்கூறிய சேர மன்னனின் அதிகாரி செண்பகராமன் என்பவன் தன் தங்கைக்கு ஸ்ரீதனமாக இவ்வூரைக் கொடுத்தான். என்று முன்னர் கண்டோம். அவன் காலத்தில் இவ்வூர் எவ்வாறெல்லாம் சிறப்புற்றிருந்தது என்பதைச் சற்று சுருக்கமாக இங்கு காண்போம். வரகுணமஹாராஜா போன்ற பாண்டிய மன்னர்கள் காலத்திலும் ராஜராஜன் காலத்திலும் இவ்வூர் நான்கு வேதங்களும் அறிந்த அந்தணர்களுக்குத் தானமாக அளிக்கப்பட்டது. எனவே இவ்வூரில் நன்று கற்றுணர்ந்த பெரியோர்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்தனர்.

அந்தணர்களுக்கு தானமாக கொடுக்கப்பட்ட இந்த ஊரில் ஆயிரத்து அஞ்ஞாற்றுவர் எனக் கூறப்பட்ட வியாபாரிகளையும் குடியேற்றினன் ராஜராஜன்.

க்ஷத்திரிய சிகாமணிபுரம், இராய சிகாமணிபுரம், இராஜேந்திர சோழப் பெருந்தெருவு ஆகிய இடங்கள் இருந்தன. இதில் வியாபாரிகள் வசித்துவந்தனர். அவர்கள் சிறந்த முறையில் இப்பகுதிகளில் வியாபாரம் செய்தனர். உள்நாட்டில் மட்டுமின்றி வெளி நாட்டிலும் அவர்கள் வியாபாரம் செய்து வாழ்ந்தனர்.

இந்த ஊர் [அம்பா சமுத்திரம்] மிகவும் வளமிக்க ஊராகும். மிகவும் வளஞ்செறிந்த ஊர்களையே அந்தணர்களுக்கு தானமாக

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

அம்பாசமுத்திரம்

ஆ. பத்மாவதி, எம்.ஏ.

அட்டைப்படம் :
மன்னூர் கோயில்
கருவரையிலுள்ள ஓவியம்

முதற் பதிப்பு 1979 - 2000 பிரதிகள்
தொ. பொ. ஆ. துறை வெளியீடு எண். 56

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை அச்சகத்தில்
அச்சிடப்பெற்றது.

வரலாற்று நூல்களை வாங்கிப் படியுங்கள்

கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் வட நாட்டிலும், தென்னாட்டிலும் சிறப்பாக ஆட்சி புரிந்த விஜயநகர சாம்ராஜ்ய மன்னர்கள் சிலரின் கல்வெட்டுகள் இவ்வூரில் [பிரமதேசம்] கிடைக்கின்றன.

கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் முதலாம் வீரப்ப நாயக்கன் என்பவன் பிரமதேசத்திலுள்ள உள் கோபுரத்தைக் கட்டினான். இவனது முக்கியமான கல்வெட்டொன்றும் இங்குள்ளது. அதாவது கம்மாளர்கள் கண்டிப்பாக மற்றவர்களுடன் கலக்கக் கூடாது என்பதாகும். கம்மாளர் வரலாற்றினை அறிய இக்கல்வெட்டு முக்கிய துணை புரியும்.

கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் சேதுங்க நாட்டு மன்னன் இவ்வூரைக் கைப்பற்றி கோயில்களுக்குத் தானமளித்தும் இவ்வூருக்குத் தன் பெயரைச் சூட்டியும் மகிழ்ந்தான்.

இவர்களுக்குப்பின் இவ்வூரில் [ஊர்க்காடு] சேத்திரபதி மன்னர் என்ற ஜமீன் பரம்பரையாக வாழ்ந்து வந்தது. இவர்கள் இராமநாதபுரத்து அரசர்களோடு
வைத்துக்கொண்டனர். இவ்
திரபதி மன்னர்கள் மாணிக்க

## தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

# அம்பாசமுத்திரம்

ஆ. பத்மாவதி, எம்.ஏ

அட்டைப்படம் :
மன்னர் கோயில்
கருவரையிலுள்ள ஓவியம்

முதற் பதிப்பு 1979 - 2000 பிரதிகள்
தொ. பொ. ஆ. துறை வெளியீடு எண். 56

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை அச்சகத்தில்
அச்சிடப்பெற்றது.

வரலாற்று நூல்களை வாங்கிப் படியுங்கள்

கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் வட நாட்டிலும், தென்னாட்டிலும் சிறப்பாக ஆட்சி புரிந்த விஜயநகர சாம்ராஜ்ய மன்னர்கள் சிலரின் கல்வெட்டுகள் இவ்வூரில் [பிரமதேசம்] கிடைக்கின்றன.

கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் முதலாம் வீரப்பநாயக்கன் என்பவன் பிரமதேசத்திலுள்ள உள் கோபுரத்தைக் கட்டினான். இவனது முக்கியமான கல்வெட்டொன்றும் இங்குள்ளது. அதாவது கம்மாளர்கள் கண்டிப்பாக மற்றவர்களுடன் கலக்கக் கூடாது' என்பதாகும். கம்மாளர் வரலாற்றினை அறிய இக்கல்வெட்டு முக்கிய துணை புரியும்.

கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் சேதுங்க நாட்டு மன்னன் இவ்வூரைக் கைப்பற்றி கோயில்களுக்குத் தானமளித்தும் இவ்வூருக்குத் தன் பெயரைச் சூட்டியும் மகிழ்ந்தான்.

இவர்களுக்குப்பின் இவ்வூரில் [ஊர்க்காடு] சேத்திரபதி மன்னர் என்ற ஜமீன் பரம்பரையாக வாழ்ந்து வந்தது. இவர்கள் இராமநாதபுரத்து அரசர்களோடு
வைத்துக்கொண்டனர். இவ்
ரபதி மன்னர்கள் மாணிக்க
ற் ஒரு மாளிகை கட்டினர்.

இவ்வூரின் [ஊர்க்காடு] ஒரு பகுதிக்கு முகவைநகர் என்றும், மறுபகுதிக்கு பூவைநகர் என்றும் பெயர் சூட்டப்பட்டிருந்தது. பூவைத் தலபுராணம் பூவைகோவை ஆகிய இலக்கியங்கள் இவ்வூர் புகழை இயம்புகின்றன.

கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டில் பி..டிஷ் ஆட்சியில் தலைச் சிறந்த சுதந்திர போராட்ட வீரர்கள் வாழ்ந்தனர். பாலகங்காதர திலகர் 'தென்னாட்டுப்புலி' என்று புகழப்பட்ட நல்லகுடி சிவசுப்பிரமணியதீர்த்தபதி, கவி. சுப்பிரமணியபாரதி ஆகிய சிறந்த தேசபக்தர்களை உருவாக்கிய தலமாகி விளங்கியது இவ்வூர்.

கி.பி. 20-ஆம் நூற்றாண்டில் தலைச் சிறந்த வரலாற்றாசிரியரான கே. ஏ. நீலகண்டசாஸ்திரி அவர்களை வரலாற்றில் நிலைக்கும்படி உருவாக்கித் தந்ததும் இவ்வூரே (கல்லிடைக் குறிச்சி) நீர் நிலவளமிக்க இவ்வூர் தஞ்சைப் பகுதியைப்போல வளங்கொழிக்கும் பகுதியாக விளங்குகிறது. வானம் பொய்த்ததும் நிலமகள் வாடியதும் இப்பகுதியில் கண்டதேயில்லை.




# அம்பா சமுத்திரம்